**தெங்கு ஆராய்ச்சி சபை - 2021**

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெங்கு ஆராய்ச்சி சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, சபையின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழானஎனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- சபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 44 ஆம் பந்தியின் பிரகாரம் எதிர்வரும் காலப் பகுதியில் தாக்கமளிக்கும் என எதிர்பார்க்கக்கூடிய சம்பவங்களின் தாக்கங்கள் மற்றும் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது விற்பனை செய்யப்பட்ட தேங்காய்களுக்காக கொள்வனவாளர் களிடமிருந்து அறவிட வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 6,334,159 தொகையை செலுத்தாமல் புறக்கணித்த மோசடி தொடர்பாக குற்றப் புலனாய்வு பணியகத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டு முதல் இவ்வாறான எதிர்வரும் காலப் பகுதியில் தாக்கங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கக்கூடிய சம்பவங்களின் தாக்கங்கள் மற்றும் அதன் பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | எதிர்வரும் காலப் பகுதியில் தாக்கங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கக் கூடிய இந்த கொடுக்கல் வாங்கல்களின் தாக்கங்கள் மற்றும் அதன் பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் 44 மற்றும் 45 ஆம் பந்திகளில் குறிப்பிடப்படுகின்ற முறையில் நிறுவகத்திற்கு கிடைக்கின்ற செயற்திட்ட மானியங்களில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு காலக்கழிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல ஆண்டுகளுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் ஒவ்வொரு செயற்திட்டத்தின் பிரகாரம் இனங்காணுதல் முடியாதிருந்தமை மற்றும் முடிவடைந்துள்ள செயற்திட்டங்கள் சிலவற்றின் சொத்துக்கள் இன்னும் பெறுமானத்தேய்வு செய்தல் போன்ற பிரச்சினைகள் இதற்காக | செயற்திட்ட மானியங்களில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு காலக்கழிவு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இதனால் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்ட ரூபா 130,657,057 மானியங்களின் பெறுமதி சரியாக வெளிப்படுத்தப் படாதிருந்தமை அவதானிக்க்பட்டது. | தாக்கமளித்திருந்த போதும் 2022 ஆம் ஆண்டு முதல் இந்த சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் 17 ஆம் பந்தியின் பிரகாரம் ஆய்வுரீதியான அல்லது தொழில்நுட்ப அறிவு, விளம்பர காணொளிகள் என்பன கற்பனைச் சொத்தாக இனங்காணப்பட வேண்டியிருந்ததுடன் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் பதிவழிக்கப்படல் வேண்டும். எனினும் நீண்டகாலரீதியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்நுட்ப மேம்பாட்டை நோக்காகக் கொண்டு தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக ஊடக வலையத்தளங்களில் விளம்பரப்படுத்தப்பட்ட தெங்குப் பயன்பாடு தொடர்பான காணொளி நிகழ்ச்சித் திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 5,775,000 மீளாய்வாண்டில் ஆராய்ச்சி செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் மிகை மற்றும் கற்பனைச் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்கால பொருளாதார நலன்களை எதிர்பார்க்காமல் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்துவதை நோக்காகக் கொண்டு ஆராய்ச்சிக் கட்டத்தில் எழுந்த செலவினங்களாக இருந்தமையால் கற்பனைச் சொத்தாக இனங்காணப்படவில்லை. | ஆய்வுரீதியான அல்லது தொழில்நுட்ப அறிவு, விளம்பர காணொளிகள் கற்பனைச் சொத்தாக இனங்காணப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவகத்தால் தோட்டங்களில் | நிறுவகத்தின் சகல ஆராய்ச்சி மற்றும் மரபணு | தோட்டங்களின் உட்கட்டமைப்பு |

| | | | |
|---|---|---|---|
| | உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்படுகின்ற கிரயம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அந்த சொத்துக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 13,229,854 சீராக்கம் தொடர்பான விபரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமையினால் இந்த சொத்துக்களின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. | வள நிலையங்களில் செடிப் பயிர்ச்செய்கைகளை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்படுகின்ற செலவினங்கள் தோட்டத்தை அபிவிருத்தி செய்யும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டதுடன் செலவினங்கள் என்ன என்பது தொடர்பாக இனங்காணும் தேவையொன்று எழுந்திருக்கவில்லை. | வசதிகளை அபிவிருத்தி செய்தல் தொடர்பான சீராக்கங்கள் என்ன என்பது தொடர்பாக விளக்கமளித்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 மே 13 ஆந் திகதி முதல் திசெம்பர் 23 ஆந் திகதி வரையான காலத்தில் நடைபெற்ற 51 ஏலவிற்பனைகளின் போது ஏலமிடப்பட்ட 762,522 தேங்காய்களுக்காக பட்டியல்கள் விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் இருப்பு அதிகரித்தும், ரூபா 45,788,857 வீதம் விற்பனை வருமானம் மற்றும் கடன்பட்டோர் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 மே 13 ஆந் திகதி முதல் 2021 திசெம்பர் 23 ஆந் திகதி வரையான காலத்தில் விற்பனை செய்யப்பட்ட சகல தேங்காய்களுக்கான பெறுமதிகளுக்குரிய பட்டியல்கள் 2022 சனவரி மாதத்தின் போது விநியோகித்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | தேங்காய் ஏல விற்பனை செய்யப்பட்டவுடன் பட்டியல்கள் விநியோகிக்கப் படல் வேண்டும். |
| (இ) | செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் தேறிய காசுப்பாய்ச்சல் கணிப்பிடும் போது முன்னைய ஆண்டின் சீராக்கங்கள், உயிரியல் சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்பு விடயங்கள் பிழையான வகையில் சீராக்கப்பட்டமையினால் | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 102,986,393 தொகை அதிகரித்தும், நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்ட சொத்துக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் சரியாக சீராக்கப்படாமையால் நிதி செயற்பாடுகளின் கீழ் தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 154,071,712 தொகை குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.6. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் ரூபா 30,454,286 தொகையான கடன்பட்டோர் மீதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்படுகின்ற ரூபா 433,487 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | அறவிடுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 143(3)(அ) | பெறப்படுகின்ற சகல பணமும் தினந்தோறும் வங்கியில் வைப்புச் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் பள்ளம மரபணு வள நிலையத்தில் 2021 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட ரூபா 12,052,646 தொகை 07 நாட்களுக்கும் 42 | நாட்டில் காணப்பட்ட கொவிட் நிலைமை காரணமாக கிடைக்கின்ற பல்வேறு வருமானங்களை வங்கியில் இடுவதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. | கிடைக்கின்ற சகல பணமும் தினந்தோறும் வங்கியில் வைப்புச் செய்யப்படல் வேண்டும். |

நாட்களுக்கும் இடையிலான கால தாமதத்துடன் வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 151,245,792 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 19,639,622 ஆக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 131,606,170 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 43,427,570 இனால் அதிகரித்து செலவினம் ரூபா 88,178,600 இனால் குறைவடைந்தமை இந்த அதிகரிப்பு தொடர்பில் பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 558,504,483 ஆக இருந்த போதிலும் அதனை விட ரூபா 92,279,127 தொகை அதாவது 16 சதவீதம் அதிகரித்து ரூபா 650,783,610 வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களை ஒப்பிடும் போது 02 தலைப்புக்களில் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினங்களை விட முறையே 18 சதவீதம் மற்றும் 33 சதவீதம் குறைவாகவும், ஒரு செலவின தலைப்பில் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தை விட 93 சதவீதம் அதிகரித்தும் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாதீடு சரியான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 ஆம் ஆண்டின் மே, யூன் மற்றும் யூலை மாதங்களில் 04 சந்தர்ப்பங்களின் போது கொழும்பு பிரதேசத்தில் தனியார் கம்பனிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட போதும் பணம் செலுத்தி எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத ரூபா 4,484,947 பெறுமதியான 72,623 தேங்காய்கள் 2022 பெப்ரவரி 10 ஆந் திகதி வரை 06 மாதங்களுக்கும் 09 மாதங்களுக்கும் | நாட்டில் காணப்பட்ட COVID-19 தொற்றுநோய் நிலைமைக்கிடையே தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தின் காரணமாக தேங்காய் கொள்வனவாளர்கள் தேங்காய்களை எடுத்துச் செல்வதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | தேங்காய் விற்பனை தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டை விருத்தி செய்வதற்கும், பொறுப்புக்களை நிறைவேற்றாத உத்தியோகத்தர் கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | |
|---|---|---|
| இடையிலான காலம் வைக்கப்பட்டு அவை கன்றுகளாக முளைத்த பின்னர் ரூபா 3,011,053 தொகைக்கு மீண்டும் விற்பனை செய்யப்பட்டதால் நிறுவகத்திற்கு ரூபா 1,473,894 நட்டம் ஏற்பட்டிருந்தது. | | வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவகத்திற்குச் சொந்தமான தென்னந் தோட்டங்களில் தேங்காய் விளைச்சலை பெற்றுக் கொள்ளல் தொடர்பான சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் விழுகின்ற தேங்காய்களின் சதவீதத்தை குறைத்தல், வருடாந்தம் தேங்காய்களாகக் கூடிய தேங்காய் தடவைகளின் அளவு, பழுத்த தேங்காய்கள், அழுகிய தேங்காய்கள் மற்றும் பழுதடைந்த தேங்காய்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை தொடர்பாக போதியளவான ஆலோசனை வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனால் நிறுவகத்தின் தேங்காய் விளைச்சல் சாதகமாகவும், வெற்றிகரமாகவும் முகாமைத்துவம் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. | தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தின் தோட்டங்களில் சரியான திட்ட முறைமையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுவாக சரியாக பேணிச் செல்லப்படுகின்ற வியாபார மட்டத்தில் தென்னந் தோப்புக்களில் விழுகின்ற தேங்காய்களின் சதவீதம் 20 சதவீதத்திற்கு அண்ணளவான பெறுமதியைக் கொண்டிருந்தது. | ஹ சுற்றறிக்கையின் மூலம் சரியான ஆலோசனை வழங்கி சாதகமாக தேங்காய் விளைச்சலை பெற்றுக்கொண்டு விளைச்சலை வெற்றிகரமாக முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1992-2004 வரையான காலவீச்சில் புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு சென்று மீண்டும் சேவைக்கு வருகை தராத 08 உத்தியோகத்தர்களின் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உத்தியோகத்தர் களிடமிருந்தும், பிணையாளர் களிடமிருந்தும் பணத்தை அறவிடுவதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கையின் பிரகாரம் சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 27,529,683 தொகையை உத்தியோகத்தர் களிடமிருந்தும், பிணையாளர்களிடமிருந்தும் அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விமான பயணச் சீட்டுக் கொள்வனவில் ரூபா 68,500 தொகை மற்றும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு பிரயாண முற்பணம் ரூபா 322,073 என்பன தீர்க்கப்பட்டிருக்க வில்லை. | தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்காமையால் இந்த முற்பணத்தை தீர்ப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | தாமதமின்றி இந்த பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மூன்றாந் தரப்பினரால் நிறுவகத்திற்கு எதிராக சேவை பிரச்சினைகள் மற்றும் அடிப்படை உரிமைகளை மீறியமை தொடர்பாக 04 வழக்குகள் தொடரப்பட்டு மேலும் தீர்வு காணப்படாமல் முன்கொண்டு செல்லப்படுகின்றது. | விசாரணையில் உள்ளது. | வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக விரைவாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். வழக்குகள் ஏற்படாத முறையில் ஊழியர் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |
| (உ) | அம்பகெலே வத்தயில் பல ஆண்டுகள் முதல் பயன்படுத்தப்படாத நிலைமைக்கு உட்பட்டுள்ள 07 உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளையும், அணைக்கட்டு உடைந்து சென்றதால் சரியான நீர் இயலளவை பேணிச் செல்ல முடியாதிருந்த குளங்களையும் மீளமைப்பு | உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. குள அணைக்கட்டை மீளமைப்பதற்காக தேவையான பணம் ஒதுக்கப்பட்டு அளவிடைப் பத்திரம் (BOQ) தயாரிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் கேள்வி கோரி பணிகளை | நிறுவகத்திற்குச் சொந்தமான இந்த சொத்துக்களை தேவையான பிரகாரம் திருத்துதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வினைத்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிறுவகத்தினால் 2021 மே மற்றும் யூன் மாதங்களில் 02 கம்பனிகளுக்கு விற்பனை செய்யப்பட்ட 96,816 தேங்காய்களுக்காக பெறப்பட்ட ரூபா 6,334,159 தொகையான 07 காசோலைகள் மதிப்பிழந்திருந்ததுடன் காசோலைகளை ஓய்வுபெறச் செய்வதற்கு முன்னர் தேங்காய் இருப்புக்களை எடுத்துச் செல்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. இதனிடையே 86,816 தேங்காய்கள் ரூபா 5,627,159 தொகைக்கு விற்பனை செய்யப்பட்ட கம்பனியின் காசோலைகள் தொடர்ச்சியாக மதிப்பிழந்து காணப்பட்ட போதும் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் மேலும் ரூபா 12,659,704 பெறுமதியான 218,335 தேங்காய்கள் அந்தக் கம்பனிக்கு வழங்கப்பட்டு ஆண்டின் இறுதி வரையும் பட்டியல் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இந்த தேங்காய் இருப்புக்களை உள்ளடக்கிய 51 ஏல விற்பனைகளின் போது விற்பனை செய்யப்பட்ட 762,522 தேங்காய்களுக்காக அறவிட வேண்டிய ரூபா 45,788,857 தொகைக்காக தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தேங்காய் | மதிப்பிழந்த காசோலைகளுக்காக பல சந்தர்ப்பங்களின் போது காசோலைகளை வழங்கப்பட்டதும் அவைகளும் மதிப்பிழந்திருந்தது. இதற்காக கொழும்பு குற்றப் புலனாய்வு பணியகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தேங்காய் விற்பனையிலிருந்து கிடைத்த காசோலைக்காக பற்றுச்சீட்டின் பிரகாரம் தேங்காய்களை அகற்றுவதற்கான அதிகாரம் கையளித்தல் அறிவித்தலில் விநியோகிக்கப்பட்டிருந்தது. | தேங்காய் விற்பனை தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டில் காணப்படுகின்ற குறைபாடுகளை சரிசெய்து கொள்வதற்கும், அறவிட வேண்டிய பணத்தை அறவிடும் வகையில் சட்டரீதியான நடவடிக்கைகளை உரிய பிரகாரம் செயற்படுத்துவதற்கும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏலவிற்பனை விதிக் கோவையின் பிரகாரம் தாமதக் கட்டணம் மற்றும் தண்டப்பணம் கணக்கீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல் தொடர்பில் முகாமைத்துவம் சரியான கவனம் செலுத்தப்பட்டமை அவதானிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | நிறுவகத்திற்குரிய அம்பகெலே மரபணு வள நிலையத்தில் பால் பெறக்கூடிய 21 பசு மாடுகள் காணப்பட்ட போதிலும் 2018 மார்ச் 16 ஆந் திகதியின் பின்னர் பால் விற்பனை வருமானம் அறிக்கையிடப்படாமை சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது. மேலும் 318.5 ஏக்கர் பரப்பளவுடைய இந்த நிலையத்தில் கள மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் உதவி தோட்டக் கண்காணிப்பாளராலும், சகல அலுவலக நடவடிக்கைகளும் நாளாந்த அடிப்படையில் இருக்கின்ற தொழிலாளரினாலும் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக நிர்வாக நடவடிக்கைகள் சரியான முறையில் மேற்கொள்ளப் படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 21 பசு மாடுகள் இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டு முதல் பால் பெற்றுக்கொள்வதற்காக தொழிலாளர் இன்மையால் பால் விற்பனை வருமானம் அறிக்கையிடப்படவில்லை. எதிர்காலத்தில் புதிய தொழிலாளர்களை சேர்த்து பாலை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தோட்டத்தில் சில காலமாக காணப்படுகின்ற எழுதுவினைஞர் வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர் ஒருவரை ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிறுவகத்திற்குச் சொந்தமான இந்த வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துதல் வேண்டும். பால் வருமானத்தை கணக்கீடு செய்யப்படாமை தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப் படல் வேண்டும் |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அம்பகெலே மரபணு வள நிலையத்தில் 75 ஏக்கர் நில அளவில் 4015 தென்னை மரங்கள், பள்ளம | காணப்படுகின்ற குறைபாடுகளை மாற்றியமைத்து தற்போது சரியாக | சாத்தியவள ஆய்வின் அடிப்படையில் செயற் |

| | | | |
|---|---|---|---|
| | மரபணு வள நிலையத்தில் 200 ஏக்கர் நில அளவில் 8000 தென்னங் கன்றுகளுக்கு நீரை வழங்குவதற்காக ரூபா 26,425,215 செலவில் நீர் வழங்கும் 02 முறைமைகள் ஸ்தாபிக்கப்பட்ட போதும் அதற்காக நிர்மாணிக்கப்பட்ட 04 குழாய்க் கிணறுகளில் நீர் போதியளவில் காணப்படாமையால் 04 தாங்கிகளுக்கும் மற்றும் கிணற்றுக்கும் நீரை சேகரித்து களத்தை பகுதிகளாக்கி 07 நாட்களுக்கு ஒரு தடவை வீதம் நீர் வழங்குவதால் மரத்துக்கு போதியளவான நீர் கிடைக்கப் பெறாதிருந்ததுடன் பள்ளம மரபணு வள நிலையத்தில் 215 ஏக்கர் நில அளவில் காணப்படுகின்ற தென்னைப் பயிர்ச்செய்கை இந்த நீர் வழங்கல் முறையில் மேவுகை செய்யப்பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக இந்த முறைமையில் எதிர்பார்த்த பெறுபேறு பெறப்பட்டமை அவதானிக்கப்படவில்லை. | அமுல்படுத்தப்பட்டுள்ளது. | திட்டங்களை அமுல்படுத்து வதற்கும், நீர் வழங்கல் முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகளை சரிசெய்து அவற்றை வெற்றிகரமாக அமுல்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 யூலை 07 ஆந் திகதிய 02/2019 ஆம் இலக்க நிறுவகத்தின் தோட்ட முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் தேங்காய் பறித்தவுடன் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்த போதிலும் 10 மரபணு வள நிலையத்தில் 2021 சனவரி முதல் நவம்பர் வரை பறிக்கப்பட்ட 4,123,986 தேங்காய்களில் 939,933 தேங்காய்கள் அதாவது 22 சதவீதம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விற்பனை செய்வதற்கு | 2022 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களின் போது 2021 ஆம் ஆண்டிற்குரிய நாற்று தேங்காய்கள் மற்றும் விற்பனை செய்யப்பட்ட தேங்காய்கள் யாவும் அகற்றப்பட்டுள்ளது. | தேங்காய் பறித்தவுடன் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். விற்பனையை தாமதப்படுத்திய உத்தியோகத்தர் களின் அந்த நலிவான செயலாற்றல் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | சபைக்குரிய 10 மரபணு வள நிலையங்களுக்கிடையே 2021 ஆம் ஆண்டில் பொத்துக்குளம் நிலையத்தில் 12 தடவைகள் தேங்காய் விளைச்சல் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதும் ஏனைய 09 நிலையங்களில் பெறப்பட்ட விளைச்சலின் தடவை 07 அல்லது 08 மாத்திரமாக இருந்தது. குறித்த காலத்தில் தேங்காய் பறிக்காமையே உச்ச அளவில் தேங்காய் விளைச்சலை பெற்றுக் கொள்வது தொடர்பில் தாக்கமளித்திருந்த போதிலும் அது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த தரப்பினர் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | அந்தந்த ஆராய்ச்சி நிலையத்தில் அல்லது மரபணு வள நிலையத்தில் தொழில்நுட்ப விடயங்களை கவனத்தில் கொண்டு வருடாந்தம் பறிக்கப்படுகின்ற தேங்காய் தடவைகளின் எண்ணிக்கை தீர்மானித்து மதிப்பீடு செய்யப்பட்ட தேங்காய் விளைச்சல் தயாரிக்கப்பட்டுள்ளது. | தேங்காய் பறிக்கும் தடவைகளின் எண்ணிக்கை குறைவடைந்தமை தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப் படல் வேண்டும். தேங்காய் விளைச்சலை பெற்றுக்கொள்வது தொடர்பாக சரியான ஆலோசனை வழங்கப்படல் வேண்டும். |
| (இ) | தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசனை பத்திர இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்ட நாற்றுமேடை பராமரிப்பு மற்றும் தென்னங் கன்றுகளை தெரிவு செய்யும் ஆலோசனையின் பிரகாரம் தேங்காய்கள் நடப்பட்டு 05 மாதங்களில் முளைக்காத மற்றும் தாமதமடைந்து முளைக்கின்ற தேங்காய்கள் அகற்ற வேண்டியிருந்ததுடன் அதன் சதவீதம் 18 சதவீதமாக இருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் பள்ளம, அம்பகெலே மரபணு வள நிலையங்களில் 2020 சிறுபோகத்தில் மற்றும் 2021 பெரும்போகத்தில் பயிரிடப்பட்ட பல வகைகளில் 99,670 கலப்பின விதைகளில் 05 மாதங்களில் | தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் மரபியல் மற்றும் தாவர இனப்பெருக்க பிரிவின் பரிந்துரையின் பிரகாரம் தரமான நிலைமையில் உயர்ந்த தேங்காய் நாற்றுக்களை தெரிவு செய்வதற்கு இலக்கிட்டு உறுதிப்படுத்தியதன் பின்னர் 70 சதவீதமான தேங்காய்கள் அளவே விற்பனை செய்யப்படுகின்றது. | 18 சதவீதம் இடமளிக்கப் பட்டுள்ள சதவீதத்தை விட அகற்றப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட 10 சதவீதத்தினால் உயர்வடைந்து சென்றமைக்கான காரணத்தை கண்டறிந்து தேவையான தீர்வு வழங்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தோல்வியடைந்து அகற்றப்பட்ட அளவு 28,098 அதாவது 28 சதவீதமாக உயர்ந்த அளவினைக் கொண்டிருந்ததுடன் இது தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினர் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | | |
| (உ) | நிறுவகத்தினால் 2015 இற்கும் 2021 இற்கும் இடையிலான காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட 08 நீண்டகால ஆராய்ச்சிகள் பூர்த்தி செய்யப்படுகின்ற வருடம் குறிப்பிடப்படாதிருந்ததுடன் மேலும் 08 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் 09 வருடங்களுக்கும் 21 வருடங்களுக்கும் இடையிலான காலமாக அமுல்படுத்தப்படுகின்றது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டு 2016 இற்கும் 2019 இற்கும் இடையிலான காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட மேலும் 21 ஆராய்ச்சிகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. அதன் காரணமாக ஆராய்ச்சிகளை ஆரம்பித்த உத்தியோகத்தர்கள் அதனை பூர்த்தி செய்வதற்கு இடமளிக்காமை, காலங்களுடன் தொழில்நுட்பத்தில் இடம்பெறுகின்ற மாற்றங்கள் போன்ற விடயங்களின் பிரகாரம் ஆராய்ச்சியின் விளைவுகள். நிறுவகத்தின் நோக்கங்களுக்காக ஈடுபடுத்துதல் தொடர்பில் தாக்கமளிக்கின்றமை அவதானிக்கப்பட்டது. | பல வருட பயிர்ச் செய்கையான தெங்கு தொடர்பாக அனேகமான ஆராய்ச்சிகளுக்காக நீண்ட காலம் எடுக்கின்றமை பொதுவானதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற வருடம் குறிப்பிடப்படாதிருந்த ஆராய்ச்சிகளை நாளதுவரையாக்கி அந்த ஆராய்ச்சிகளை பூர்த்தி செய்கின்ற வருடம் 2023 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்படும். இதற்காக தேவையான உள்ளக ஆராய்ச்சி குழு மதிப்பீடு 2022 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் மாதங்களில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நீண்டகாலம் கடந்துள்ள ஆராய்ச்சி செயற்திட்டங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்து ஆக்கபூர்வமான முறையில் அவற்றை பூர்த்தி செய்வதற்கான துறையை அபிவிருத்தி செய்வதற்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தகவல்களின் பிரகாரம் 391 ஆன அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 115 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 29 சதவீதம் ஆகும். அவ்வாறே நிறுவகத்தின் 09 ஆராய்ச்சி பிரிவுகளில் பிரிவுத் தலைவர்கள், சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 56 அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்களில் 21 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 37 சதவீதம் ஆகும். இந்த நிலைமை நிறுவகத்தை தாபித்ததன் நோக்கத்தை சரியான பிரகாரம் நிறைவேற்றாமை தொடர்பில் தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | சிரேஷ்ட மட்டத்தில் உள்ளக ரீதியில் ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்காக அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்த உள்ளக உத்தியோகத்தர்கள் காணப்படாதிருந்தமையும், தகைமைகளுடன் விண்ணப்பதாரர்கள் காணப்படாமையும் காரணமாக இருந்ததுடன் தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கையில் காலம் தாழ்த்தப்பட்டுள்ள ஆட்சேர்ப்புக்களுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டவுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது ஊழியர் எண்ணிக்கையை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |